பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 02 2026 FRIDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மாணவர்கள் தங்களுக்கேற்ற கற்றல் முறைகளை பின்பற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று Pariksha Pe Charcha கலந்துரையாடலில் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாணவர்கள் எவ்வித அழுத்தத்திற்கும் உட்படாமல் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான ஊக்கத்தை பிரதமர் அளித்துள்ளார் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை இன்று நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

4. ரிசர்வ் வங்கி, இன்று வெளியிட்ட இருமாத கொள்கையில் வட்டி விகிதங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

மாணவர்கள், தங்களுக்கேற்ற கற்றல் முறைகளை பின்பற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

Pariksha Pe Charcha கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக இன்று பேசிய பிரதமர், ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கற்றல் திறன் இருப்பதை புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு செயல்படுவது அவசியம் என்று கூறினார்.

ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஆலோசகர்கள் தரும் யோசனைகளை கவனமுடன் கேட்டு, செயல்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்களுடைய அனுபவங்களையும், புரிந்து கொள்ளும் ஆற்றலையும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

பிறர் சொல்லும் வழிமுறைகளை கண்மூடித்தனமாக பின்பற்ற வேண்டாம் என்றும் அவர் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

வழிகாட்டுதல்களை ஒருங்கிணைத்து, தங்களுக்கேற்ற வகையில் பயன்படுத்துவதால் உண்மையான நம்பிக்கை பிறக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் கற்றுக்கொள்ளும் வேகத்தை ஆசிரியர்கள் கணித்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

மாணவர்கள் நிர்ணயிக்கும் இலக்குகள், அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்று கூறிய பிரதமர், மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை என்று தெரிவித்தார்.

ஒரு விவசாயி, நிலத்தை பண்படுத்தி விதைப்பதைப் போல, ஆசிரியர்களும் மாணவர்களின் சிந்தனைகளை நெறிப்படுத்திய பின்னர் கற்பித்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மதிப்பெண்களை விட திறமை முக்கியமா? என S. வெங்கடேஷ் என்ற மாணவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர், வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் சமநிலையை பராமரிக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார்.

திறமையையும், மதிப்பெண்ணையும் சமநிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தொழில் திறமைக்கும், வாழ்க்கை திறமைக்கும் இடையேயான வேறுபாட்டை புரிந்து கொண்டு, மாணவர்கள் இரண்டையும் மேம்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முறையான படிப்பறிவின்றி, திறமையை பெற முடியாது என்று கூறிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, கற்பித்தலை கவனிப்பதோடு, அறிவாற்றலையும் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இந்த Pariksha Pe Charcha நிகழ்ச்சியில், கோயம்புத்தூர், ராய்ப்பூர், குவஹாத்தி, தேவ்மோக்ரா, தில்லி லோக்கல்யாண் மார்க் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் திரு. நரேந்திர மோடி கலந்துரையாடினார்.

>>>>>><<<<<<

Pariksha Pe Charcha நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவுரைகளை வழங்கியுள்ளார் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாணவர்கள் கற்க வேண்டிய பாடங்களை முன்கூட்டியே தெரிவித்து, அதில் அவர்களை முறையாக தயார் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களிடையே, கற்கும் ஆர்வத்தையும், புரிந்து கொள்ளும் திறனையும் ஆசிரியர்கள் வளர்க்க வேண்டும் என்று பிரதமர் கூறிய ஆலோசனை நல்ல பலனை அளிக்கும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாணவர்கள், சமநிலையுடன் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி Pariksha Pe Charcha நிகழ்ச்சியில் வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

மாணவர்கள் எவ்வித அழுத்தத்திற்கும் உட்படாமல் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான ஊக்கத்தை பிரதமர் அளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு சரியான பாதையை பிரதமர் காட்டியுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மாணவர்களுடன் பிரதமர் கலந்துரையாடும் இந்நிகழ்ச்சி, தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக உள்ளதாக தமிழகத்தின் நாமக்கல்லைச் சேர்ந்த மாணவி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவி 39 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பிலும் பெரிய அளவில் வளர்ச்சியை உறுதி செய்யும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்தியா - ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், பாதுகாப்பு, பருவநிலை, தொழில்நுட்பம் மற்றும் செயல்திறன் ஆகியவை இருதரப்பிலும் மேம்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த மாநாடு, மேலும் பல பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாக அமையும் என்றும், புதிய வாய்ப்புகளை உருவாகும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

நாகாலாந்து அரசிற்கும், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ள ஒப்பந்தம், அம்மாநில மக்களுக்கு புதிய வாய்ப்புகளையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்யும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா-வின் பதிவை தமது வலைதளப்பதிவில் பகிர்ந்து கொண்டுள்ள பிரதமர், கிழக்கு நாகாலாந்தில் பெரிய அளவிலான முன்னேற்றம் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைதி, முன்னேற்றம் மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சியை இந்த ஒப்பந்தம் உறுதி செய்யும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, மக்களவை நண்பகல் 12 மணி ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

இன்று காலை அவை கூடியதும், காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, தாங்கள் எழுப்பிய பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அவையின் மையப்பகுதிக்கு வந்து அவர்கள் கோஷமிட்டனர்.

அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, உறுப்பினர்களை இருக்கைக்கு சென்று அமருமாறு கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தொடரில், மக்களவை நடவடிக்கைகள் 19 மணி நேரத்திற்கு மேல் அமளியால் பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவசியமின்றி, அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

உறுப்பினர்கள், அவையின் கண்ணியத்தை காக்க வேண்டும் என்றும், கேள்வி நேரத்தை நடத்துவதற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அர்த்தமுள்ள விவாதங்கள் மூலம், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்றும், பதாகைகளை ஏந்தியும், முழக்கங்களை எழுப்பியும் அவையை முடக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்றும் அவர் கூறினார்.

முதலில், அவை நண்பகல் 12 மணிவரையும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>><<<<<<

ரிசர்வ் வங்கி, இன்று வெளியிட்ட இருமாத கொள்கையில் வட்டி விகிதங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

மும்பையில் இன்று இதனை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா, ரெப்போ வட்டி விகிதம் தொடர்ந்து ஐந்து புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக நீடிக்கும் என்று தெரிவித்தார்.

வரும் நிதியாண்டின் முதல் காலாண்டில், நுகர்வோர் விலை அடிப்படையிலான பணவீக்கம் நான்கு சதவீதமாகவும், இரண்டாம் காலாண்டில் நான்கு புள்ளி இரண்டு சதவீதமாகவும் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட மதிப்பீட்டிலிருந்து, பணவீக்கம் சற்று உயர்ந்துள்ளதாக திரு. சஞ்சய் மல்கோத்ரா, குறிப்பிட்டார்.

உலோக பொருட்களின் விலையேற்றம் காரணமாக, பணவீக்கம் சற்று அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி, வரும் நிதியாண்டின் முதல் காலாண்டில், ஆறு புள்ளி ஒன்பது சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் ஏழு சதவீதமாகவும் உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.

*மின்னணு வங்கி பணப் பரிவர்த்தனைகள் தொடர்பாக, ரிசர்வ் வங்கி வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடவிருப்பதாகவும் அவர் கூறினார்.*

*மின்னணு பணப்பரிவர்த்தனையில் 25 ஆயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்படும் பட்சத்தில் வாடிக்கையாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருவதாகவும் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், இங்கிலாந்துக்கு எதிராக டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.*

*ஹராரேயில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*

*உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் பயிற்சியாட்டத்தில் இந்தியா ஏ இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.*

*பெங்களூருவில் இப்போட்டி மாலை 5 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>>END<<<<<<*